# ஆதங்கம்



விக்ஞ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajan
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

விக்ன பாக்கியநாதன்

வெளியீடு
Kalaivilakku
S.Packiyanathan
Droote.13
4600 Dortmund 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

"இலக்கியம் என்பது சமுதாயக்கண்ணாடி" என்பது ஆய்வாளர் கருத்து. தான் வாழும் காலத்தின் நிலைமைகளின் தாக்கங்களுக்கமைய ஒரு இலக்கிய கர்த்தா தன் இலக்கியத்தை ஆக்குகிருன். அவனது சொந்தக்கருத்துக்களாக இலக்கியத்திற் பிரதிபலிக்கப்படுபவை, பெரும்பாலும் அவன் சமுதாய நிலை குறித்த அவனதுவிமர்சனங்களே. இவ்வகையில் மனிதன் எங்கிருந்தாலும், எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் அதன் பிரதிபலிப்பின்றி அவனல் இலக்கியம் படைக்கமுடியாது, என்பது இலக்கியம் பற்றிய பொதுவிதியாய்ப் போனது.

நம்மவர்களைப் பொறுத்தவரையிலும் கூட இந்தப் பொதுவிதிக்கமைய நாட்டு மண், மண்வாசனை, அதன் பிரச்சினைகள் என்ற பின்னணியில் இலக்கியங்கள் சூழ்நிலைக்கமையச் "சுடச்சுடப்" பிறக்கின்றன. அதேவேளை அந்த மண்ணின் செல்வாக்கால், வாழ்நிலைக்கலாச்சாரங்களால், ஒன்றி வாழ்ந்து, பின் அரசியல் . தனிப்பட்ட காரணங்களால், அம்மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து வேறுபட்ட ஒரு சூழ்நிலையிலும், கலாச்சாரத்திலும் வாழநேர்ந்துவிட்ட ஒரு தொகையினரைப் பொறுத்தவரையில் பிறப்பிடச்சூழல், அது ஊட்டிய பண்பாட்டுத் தன்மைகள் என்பவற்றேடு வாழிடச்சூழல், அதுதரும் புதியகருத்துச் செயற்பாட்டுப் பரிமாணங்கள் என்ற இவ்விரண்டு தன்மைகளும் இணைந்து புதியதொரு பார்வையைப் பிறப்பிக்க, இதனல் வழமை மீறிய கருத்துக்களும், அவற்றை வெளிக்கொணர்வதில் புதிய சூழலின் பாதிப்பும் தாக்கமும் இணைந்த ஒரு கலவை முயற்சியைக் காணமுடிகின்றது. தெளிவாகச் சொன்னல் வழமைகளைப் புதிய கோணத்திற் பார்க்கும், சொல்லும் ஒரு புதிய ஆக்கவெளிப்பாடு ஏற்படுத்தப்படுகிறது. எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்தவர்களின் அத்தனை இலக்கிய முயற்சிகளும் (சஞ்சிகைகளாயிலும், தொகுப்புகளாயிலும்) இவ்வகையிலே அமைகின்றன. அத்தகையதொன்றுகவே விக்கு பாக்கியநாதனின் கவிதைத்தொகுப்பாகிய இந்த "ஆதங்கமும்" விளங்குகிறது. "சிந்திக்கத்தூண்டிய ஜேர்மன் கலாச்சாரம்" என்ற நூலிலும், கலைவிளக்கு" சஞ்சிகையிலும் பங்காசிரியராகப் பணியாற்றும் விக்கு பாக்கியநாதனுக்கு வேறு அறிமுகம் தேவையில்லை.

கவிதைகளின் கருத்துக்களில் புதுப்பார்வைகள் விரிகின்றன. உள்ளத்தின் பல்கோணப் பலகைகளின் பார்வைகள் புதுப்பரிமாணங்களைத் தருகின்றன. "பொதுமை" கவிதையில் கர்ப்பப்பை எங்குண்டோ? அங்குதான் கற்புண்டா? கற்பின் உருவம் கர்ப்பப்பையா?" என்ற வரிகளின் கருத்து மிக ஆழமானதும், புதியதுமாகும். மொத்தமாகப் பார்க்கின்றபோது மின்னற்கீற்றுகளாக நயமும் கருத்தும் தலைநீட்டியிருக்கின்றன. இவற்றை முறையாக வளர்த்தெடுத்து ஒரு கவிதைப்பெருமழையாக்க விக்கு பாக்கியநாதன் மேலும் அக்கறை எடுக்கவேண்டும்.

ஆக்கமின்றிச் சோம்பியிருப்பதைவிட எதையும் ஆக்குவோம் என்ற ஆர்வம் வரவேற்கத்தக்கது, பாராட்டப்படக்கூடியது. அந்த ஆக்கத்தை முறைப்படி நெறிப்படுத்திஞல் அது புகழப்படக்கூடிய தொன்றுகிவிடும். விக்கு பாக்கியநாதனிடம் முயற்சியும், உணர்வும், இருக்கின்றது. அவை செம்மைப்படுத்தப்பட அவர் சிறந்த கவிஞராவார். அதற்கு "ஆதங்கம்" ஒரு அடிப்படையாகட்டும். தொடரவேண்டிய அவரின் செம்மையான நெறிப்படலுக்கு என் வாழ்த்துக்கள்.

சின்டல்பிங்கன்
மே. ஜேர்மனி
11.8.90

அ. குமரன் பீ.ஏ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எமது நாட்டைப் பொறுத்தவரையில், எம்மினத்தைப் பொறுத்தவரையில் பல ஆதங்கங்கள் நிறைந்துள்ளன, இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நீடித்த விடுதலைப் போராட்டத்தினால் பல உடன்பிறப்புகள் பலியானதுடன், தாயகம் தீயரக்கன் பிடியிலும், அழிவின் கையிலும் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. போராட்டம், இறப்பு, பொருளிழப்பு, அச்சம், வறுமை, நோய், துயரம், கண்ணீர் எனப் பல வகைப்பட்ட பயங்கர முத்துக்களைக் கொண்டிணைந்த ஒரு கோரச்சங்கிலியாக இன்றைய எமது சமுதாயம் விளங்குகிறது. இவற்றுடன் பெண்ணடிமைத்தனமும் இணைந்து வளர்ந்து கொண்டு வருகின்றது. இவற்றின் பாதிப்பு, ஆக்கிரமிப்பு என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டே "ஆதங்கம்" எனும் இப் புதுக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அமைந்துள்ள புதுக்கவிதை எனும் இலக்கியவடிவத்தை உங்கள் கரத்தில் தவழவிட்டுள்ளோம். இதிலுள்ள பெரும்பாலான கவிதைகள் நமதுகுரல், ஏலையா, மண், தென்றல், கலைவிளக்கு, வண்ணத்துப்பூச்சி, அலைகள், சிந்தனை, தளிர் என்னும் பெயர்களுடன் இங்கு வெளிவரும் சஞ்சிகைகளில் பிரசுரமானவையாகும். இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் வாசிப்பவர் மனதில் சிறிதளவேனும் ஆக்கபூர்வமான பாதிப்பை ஏற்படுத்தினால் அதுவே இந்நூலை எழுதிய பயனெனக் கருதுவோம்.

தமது சிரமங்களைப் பொருட்படுத்தாது இந்நூலுக்கு முகவுரை வழங்கிய ஆசிரியர், திரு. அ. குமரன் அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற வரைந்துதவிய ஓவியர், ரமணி அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. 8. 90
மே. ஜேர்மனி

விக்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே....

1. பாசவிளக்கம்
2. ஆதங்கம்
3. அரிது அரிது
4. விடுதலைப் பூக்கள்
5. தேவை
6. எரிசாம்பர்
7. ஒற்றுமை
8. மந்திரங்கள்
9. வறட்சி
10. இன்றைய நிலை
11. சுகதேகிகள்
12. உதிரிப் பாகங்கள்
13. ஏழைகளல்ல
14. கோலம்
15. பாரபட்சம்
16. இவர்கள்
17. வெள்ளப்பெருக்கு
18. ஒளி
19. கொடுமை
20. அவசரப்புதுமை
21. பெண்ணே!
22. மனம் வருந்து
23. ஏற்றுமதிச் சரக்கு
24. பொதுமை
25. தொழுநோயா?
26. இருதுருவங்கள்
27. சீதனச் சீர்திருத்தம்.
28. நெருப்பு
29. வாசமலர்கள்
30. சுவடுகளை
31. முடிந்தவை
32. இன்னும் எத்தனை நாளைக்கு?
33. சாத்திரம் ஏனடி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசவிளக்கம்.

அன்று பாடசாலை சென்றோம்.
பாடங்கள் கற்றோம்.
எங்குமே பாசத்தின் அத்தியாயத்தை
எந்தப் புத்தகத்திலும் கண்டறியோம்.
பழகும் நண்பரில் தேடினோம், அங்கும் இல்லை.
ஒரு வயிற்றிலே உதித்திட்ட உடன்பிறப்புகளிலே...
அங்கும் முழுமையில்லை.
பாசத்தின் அத்தியாயத்தை
எந்நூலிலே படிப்பதென்று
பக்குவம் அறியாத வயதெமக்கு.
களைத்து வீட்டில்அமர்ந்தபோது,
தாகமாக இருப்பீர்களே எனத்
தன் தளிர்க்கரங்களிலே
குவளை நிறைய நீர் சுமந்து
விடாய் தீர்த்து அணைத்த எம் தாய் முகத்தில்
நிறைந்திருந்தது ஒன்றே ஒன்று.
அது தான் உள்ளுணர்விலே ஏற்படும் காயத்துக்கு
சுகம் கொடுக்கும் தாய்ப்பாச மூலிகை.
பாசத்தின் ஆதியந்தத்தை
அன்னை எனும் நூலினிலே
ஐயமற்றுக் கற்று விட்டோம்.
அனைவரும் வேற்றுமையின்றிப் படித்திடும் நூல்,
அன்னை...அன்னை...அன்னை.
இதில் உள்ள அத்தியாயங்கள் அத்தனையும்
பாசத்தின் விளக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்

கலம் பெருகி உணவளிக்க உறுபொருள் தேவை—எங்கும்
நிலமகள் சிரித்து நித்தம் பல சொரிவதற்கு,
அருணனும் வருணனும் நட்புறவாதல் வேண்டும்.—அங்கு
நிம்மதியாய் வாழ நமக்கு நிரந்தர மண் தேவை.

நிலத்திலே நம்மினத்துக்கென்ற —ஒரு
சுதந்திர முத்திரை பொறித்திட வேண்டும்.
நம்மினச் சுதந்திர மூச்சுக்கள் — எங்கும்
வசந்த காற்றாக வீசுதல் வேண்டும்.

பயம் பரிதவிப்பு பஞ்சம் என்றநிலை மாறி
பார்ப்பவர் யாவரும் நண்பராகப் பழகிடும்
சொர்க்காபுரி ஒன்று நம்மிலங்காபுரியில்
இனிதே அமைந்திடல் வேண்டுமன்றோ!

மங்கையரும் மைந்தரும் சமபலமாய்
கூடி வாழ்ந்திடல் வேண்டும் மகிழ்வுடனே.
பறவைகள் சுதந்திரக் கீதம் இசைக்க,
விலங்குகள் பெடையுடன் கூடி இன்புறவேண்டும்.

எல்லோரும் எல்லாம் பெற்றே — நம்
குறுங்கால வாழ்விலே நீடிய இன்பம் பெற்று
அன்பு, ஒற்றுமைச் சங்கிலியால் பிணைந்து
ஒன்றித்து வாழ்தல் எம் அகத்து ஆதங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிது அரிது

தமிழர் எம்மினத்தக்கு
தாங்கமுடியாத் துன்பம்.
அகதிகளாகப் பலர் பலதேச வாசம்.
நிம்மதி காய்ந்து கருகியகோலம் தாய்நாட்டில்.
வீதியெங்கும் பதற்றங்கள்
வேளைக்கு உணவில்லை.
இயற்கைத்தாவர உணவுகளும் பொசுங்கிய தோற்றம்.
எதைச் சாப்பிடுவது என்றதொரு தவிப்பு.

வயிறு நிரம்ப உண்ண வகையற்ற தன்மை
விலைவாசி ஏற்றம் இன்று ஏழைகளின் கூற்றுவன்
அரிது அரிதென்று ஔவையார் கூறிய மானிடப்பிறப்பு
நாயினும் கேடாக நாதியற்றுப் போனதே.
வாய் திறந்து பேசவும் வகையில்லை
வாய்திறந்து உண்ணவும் வகையில்லை.

நாளுக்கு நாள் திண்டாட்டம் அதிகரிப்பு
நாளை என்ற நம்பிக்கையும் ஈடாட்டம்,
வாழ்வும் ஒன்று இறப்பும் ஒன்று என்றிட்ட
சமத்துவம் மன விரக்திகளினாலே.
அரிதான மானிடப்பிறவி அற்பமாகி
பந்தாட்டம் ஆடும் நிலை எமக்கேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் பூக்கள்.

வாழ்வின் குளிர்மையை
வனப்புடன் வருடிடும் எம்மிளையோர்
எம்மினத்தோர்...→சிலர்
விடுதலை வேண்டித் தியாகிகளாகினர்.
அவர்தம் விடுதலை வேட்கையுடனே
தாய் மண்ணிலும் விண்ணிலும்
பூங்காற்றுடன் இணைந்து
சுதந்திரத்தைத் தேடுவர்.
சுதந்திரத்துக்கான விடியலைக் கண்டே
அவர் மனம்
வாழ்த்து விதைகளைச் சொரியும்.
அவை மண்ணிலே முளை கொண்டு
விடுதலை மலர்களாகச்
சுதந்திர மணத்தைப் பரப்பும்.
விண்ணில் விடுதலைத் தியாகிகளின்
விழிகளினின்றும் சிந்தும்
ஆனந்தக் கண்ணீரால்
விடுதலைப் பூக்கள் சிலிர்த்துக் குளிர்ந்து
மலர்ச்சி பெறும்.
இந்த மலர்ச்சியிலே தான்
தாய்மண்ணின் பிணவாடை மாறி....
நிணவாடை மாறி....நறு
மண வாடை வீசும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

தாகத்துக்குத் தேவை
தண்ணீர் . . . . .
களைப்புக்குத் தேவை
இளைப்பாறல்.
பசிக்குத் தேவை
உணவு.
கண்ணுக்குத் தேவை
காணும் காட்சி.
நம்மினத்திற்குத் தேவை
நமக்கென்றொரு மண்.
ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்று
அவசியமான போதில்
எமக்கவசியமானதைப் பெற்றிட,
நாம் தவறலாமா?
உறுபொருள் உடமை காக்க
ஒரு வீடு தேவை.
அந்தவீடு அமைய நமக்கு நாடு தேவை.
நாடின்றேல் வீடெங்கே?
நாளின்றேல் கோள் எங்கே?
எல்லாமே இருக்குமிடத்தில் இருக்கும் போதுதானே
யாவும் சுகமாகும்.
வாழ்வும் நிஜமாகும்.

ஏலையா
வைகாசி -1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிசாம்பர்

பயங்கர வாதங்கள்
படுகொலைகள் தீ வைப்புகள்..
தசைத்துண்டங்கள் தரைதனிலே,
எரிசாம்பர் இணைந்தது மண்ணுடனே.
மண்வளம் பெருக்க....
உற்பத்தியை அதிகரிக்க...
உரமென்றும் பசளை என்றும்
இறக்குமதி வேண்டாம்.
வடபகுதி மண்ணோ
தமிழனின் சதைகளால்
பசளை மண்ணாகிவிட்டதன்றோ!
தரை மட்டமான தரைகளும்
விளை நிலமாகுமோ?
செயற்கை உரங்கள்
யூறியாக்கள்....?
என்றெதுவும் இறக்குமதி தேவையில்லை.
அரசுக்கு இதுவோர்
கொள்ளை லாபம் ஒருவிதத்தில்.

ஏலையா

ஆடி 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

நாங்கள்
உள்ளங் கைகள்.
ஐந்து விரல்கள் என ஐவர் நாம்.
அழகாக இணைந்துள்ளோம்.
எம் தோற்றத்திலே ஏற்ற இறக்கமுண்டு.
சிறிது பெரிது என்ற பாரிய வேறுபாடுண்டே.
அப்படியிருந்தும்....?
எம் ஐவருக்கும் ஒரே மன ஒற்றுமை.
ஐவர் நாம் செய்வதை
நால்வர் செய்யமாட்டோம்.
ஒன்றாக இயங்குவோம்.
பெரிது சிறிதென்ற பேதமிருந்தும்
ஒருவரை ஒருவர் நாம்
மிதித்துவிட எண்ணவில்லை.
எம்மிடத்திற் சமத்துவம் வேண்டுமென
உயர்ந்த விரல்களைக் கத்தரித்து
மட்டப்படுத்த விரும்பவில்லை.
எங்களது சுயமான வளர்ச்சி இது.
இதனால் எமக்குப் பிசகில்லை.
புரிந்துணர்வு எமது பொக்கிஷம்.
ஓ...மானிடனே!
ஐந்து விரல்களும் ஒரே மாதிரி இல்லையென
எம்மை உதாரணத்துக்கு இழுக்க
உமக்கென்ன தகுதி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து விரல்களுக்கும் ஒரே இரத்தம் தான்
ஓடுகிறது என்பதை அறியாயோ?
எமது இணைப்புக்கு
உமது இன இணைப்புகளை
ஒப்பிட முனைகிறாயே.
என்ன அறிவீனம்?
உங்களில் ஏற்ற இறக்கம் இருந்துவிட்டால்
நீங்கள் படும் பாடு அப்பப்பா!
துடிக்கும் துடிப்பு.
கர்வக் காய்ச்சல்.
பொறாமையின் முனகல்.
இதனால் வடியும் வெப்பக் கண்ணீரையும்
துடைத்துவிட
நாமைவர் ஒன்றிணைந்து,
செயற்பட்டு உம் வதனங்களுக்கு
சோபை ஊட்டுவதைப்
புரியாது தவிக்கின்றாயே.
மானிடன் என்றொரு பெயர்
பெரிதாகப் பெற்று நெற்றியிலே எழுதியுள்ளாய்!
ஐயா எம் ஒன்றியத்தைப் புரிவாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரங்கள்

ஊழ்வினை, விதி என்றும்
முன்செய்த பாவம் என்றும்
தரமான சொற்கூட்டங்கள்.
கடலாழக் கருத்தாழங்கள்.
ஏழைமக்கள் ஏங்கிப் பொசுங்கி
கொதித்துப் பொங்காமல்
தன்னடக்கமாக்கும் சொற்களும்
அது தரும் அர்த்தங்களும்.
இவை கூறும் அர்த்தங்களை அப்படியே நம்பி
நாம் ஊழ்வினை செய்தோம்,
ஆகவே ஏழைகள்.
எம் தலைவிதி செய்த சதி,
யாது செய்வோம்?யாரை நோவோம்?
கடவுளே வழிகாட்டுவார்.
படைத்தவன் படி அளப்பான்.
அவனே பொறுப்பு.
முன் செய்த ஊழ்வினையால் வந்த வினை.
வருந்தி உழன்று மடிவதே வாழ்க்கை
இவையே ஏழைகளின் தீட்சை மந்திரங்கள்.
இந்த மந்திரத்தை எந்த ஞானி ஓதினாரோ?
ஆனால் இன்று.....
ஏழைகள் மனதில் சாந்தமளிப்பது...
தேற்றம் கொடுப்பது இந்த மந்திரத் தந்திரங்கள்.
இதனாலன்றோ
மேல்மட்டத்தினர் நிம்மதியாய் வாழ்கிறார்கள்.
ஏழைகளுக்கு உறவு ஏழ்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சி

நாட்களுக்கு இப்போ இறகுகள் இல்லை.
இயந்திரம் ஒன்று பூட்டியது போல்
கடுகதி வேகத்தில் நாட்களின் ஓட்டம்.
கதிரவன் கடமையில் ஒழுங்கு.
நாட்காட்டித் தாள்களின் கழிவு.
உலகம் இயங்கிடவும் உயிரினம் அசைந்திடவும்
பூமித்தாயில் ஒரு வாழ்வியல் வட்டம்.
நம் தாய்ப்பூமியிலே விழுகின்ற
கதிரொளியிற் கடுவறட்சி.
சூரியக் கதிருடனே
நம்மினத்தின் மனவெக்கையும்
துப்பாக்கிச் சூடுகளின் வெம்மையும்...
தீப்பட்டவற்றின் தணற்சூடும்....
இரண்டற இணைப்பு.
வடமாகாணத்தில் கடும் வறட்சி.
அக்கினி மழை...இரத்த ஆறு,
வறண்ட மண்ணிலே இரத்த ஆற்றின் சங்கமம்.
சங்கமத்தில் உருவான கழிமுகத்திலே
தியாகப் புற்கள் முளைக்கும்.
இரத்த ஆறு விட்டுவிட்டுப் பெருக்கெடுப்பு.
மழைவெள்ளப் பெருக்குக்கு அணைக்கட்டு,
மறித்துக் கட்டுதலால், ஒரு தீர்வு.
நம் தாயகத்தில் பெருகுகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த ஆற்றுக்கு அணை கட்டிட
இன்னும் ஆவன இல்லையா?
அணைக்கட்டு நிபுணர் எங்கே போயினர்?
வட மண்ணிலே இனி
எரிசாம்பர் இணைந்த கரு மண்ணும்,
இரத்தம் ஊறிய செம்பாட்டு மண்ணும்
இணைந்து இருவாட்டி மண்ணாகிவிட்டதா?
உலகப் படைப்புகளுக்கு...
தொடக்கமும் முடிவும் உண்டு.
நம்பின உயிர்ப் பலிகள்..
முடிவு அற்றதா?
அந்தம் எப்போது?

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிலை

வயலோர மேட்டினிலே
வண்ணமுற அமைந்துள்ள
சிறிய மண்வீடு.
நெற்கதிருடன் விளையாடும்
சிறுவர் சிறுமியர் கும்மாளம்.
கதிரின் பொன்னிறங் கண்டு
விதைத்தவனுக்குப் புதுச்சுகம்.
கற்பனைகள் மனதினிலே,
காசுத்தாள்கள் மனக் கண்களிலே.
உளமாரப் பூரிப்பு
புன்னகை உதட்டினிலே.
குத்தகை வயலென்றாலும்
பாதி விளைச்சலுக்குச் சொந்தம்.
கனவுகள், கற்பனைகள்.....
வருமானத்தை மிஞ்சிவிட்ட
நினைப்புகள்.
ஒரு நாள்.....?
வயற் சொந்தக்காரன்
தனது அடியாட்களுடன் வந்து
அறுவடையும் சூடுமிதிப்பும் நடத்துகிறான்.
நெல் மூட்டைகள் போகின்றன
அவனது வீடு நோக்கியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தகைக்காரன் வாயடைத்து
ஐயா! சாமி! என்ன இது?
ஊரில் வீடுகளில் களவு, கொள்ளை
தோட்டந் துரவுகளிலும் களவு,
அது தான் இன்றையநிலை,
இப்படிச் செய்தேன்.....
வீட்டுக்கு வா!
உனது கணக்கை முடிக்கின்றேன்,
என்றவனை நம்பிச் சென்றவனுக்கு
கொடுத்ததை வாங்கிடத்தான் உரிமை.

வேறென்ன செய்யமுடியும்?
நாலும் இரண்டும் அதுவும் இதுவும்
நீ வாங்கியதும் வாங்காததும்
என கணக்குக் காட்டி
நாலில் ஒன்று......?
முழுசாகத் தருகிறேன்.
அப்படியிருந்தும் எனக்கு நட்டம்,
என்ற குரல் முதலாளிக்குச் சொந்தம்.

உலகமே இருள் மயமானது,
அவ்வேழைக்கு.
முதலாளியின் சிரிப்புப் பல்வரிசையே
வெளிச்சமாய்த் தெரிந்தது,
அந்த ஏழை பங்காளனுக்கு.
பாவம் அவன்.

தென்றல்
1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகதேகிகள்

நாங்கள் மனிதர்கள்
அங்கங்கள் அனைத்தும்
அளவாக உண்டு...
பூமியில் மிதித்து நிமிர
சுதந்திரமான உணர்வுகளுண்டு.
பதித்து நடக்கப் பாதமும் உண்டு.
அங்கவீனர்கள் அல்ல,
நாம் சுகதேகிகள்.
ஆனல்....?
நாம் நடக்கமுடியவில்லை,
சுதந்திர பாதங்களைப்
பதித்துவிட முடியவில்லை.
ஆதலால்– நம்மினம்
தாய்ப்பூமியில் நடக்கக் கால் ஊனமுற்றவர்கள்.
காலிருந்தும் பயன்பாடற்று
முடங்கிக் கிடக்கும் நிலை மடிவதெப்போ?
விடிவை எண்ணித்
துடிக்கும் நெஞ்சங்கள் வடிக்கும் கண்ணீரால்
தாய் மண் கழுவப்படுகின்றது.
ஆனல் –தொடர் நிகழ்வுகளான
போர், பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றால்
இதயங்கள் வடிக்கும்
இரத்தக் கண்ணீரால் –மண்
கறை படுத்தப்படுகின்றது– எம்
சுதந்திர மண்ணின் புதுமணத்துக்காக
காத்திருத்தல், எமது ஆதங்கமே.

மணி
ஆடி – 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரிப் பாகங்கள்

கவலைகள் கஸ்டங்கள்
கனவுகள் களிப்புகள்
என்றிட்ட உணர்வலைகள்
மானிட ஜென்மத்திலே....அவர்தம்
வாழ்க்கைச் சக்கரத்திலே
பிணைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள்.
ஆதலால்....
கவலையைக் கண்டு துவள்வதும்
களிப்புகளால் மகிழ்வதும்
பொருத்தமற்ற செய்கையே.
கவலைகளின்போது நம்பிக்கைத் துளிர்ப்பாலே,
நாளையை நல்வரவாக ஏற்று
நேர்மையுடன் வாழ்ந்திட
நினைத்துவிட்டால் மானிடர்க்கு
எல்லா நிலையும் ஒன்றே.
களிப்புகளால் விழிப்புற்று
உடற்காரியங்களுக்கு
காரணங்களைத் தேடி வாழ்ந்திடும்போதில்
சலிப்புகள், ஏமாற்றங்கள்
சிந்தை சோர்வடைதல் தீமையே.
களிப்புகளையும் கவலைகளையும்– மனத்
துலாபாரம் ஒன்றிலே வைத்து,
சமபாகமாக நோக்கிவிட்டால்
அவர்தம் வாழ்க்கை
மலர் சொரியும் சோலை.

மண்
ஆடி – 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளல்ல

நாங்கள் ஏழைகள்.....
என்பதனால் மனிதரல்ல என
எண்ணுதல் வேண்டாம்..
எங்களுக்கு உணர்வுகளுண்டு...
ஆசாபாசங்கள் உண்டு.
நாங்களும் அனுபவிக்கமுடியும்.
ஏழைகள் என்று நாம் –கருப்
பேழையில் உதிக்கவில்லை. –ஆனால்
ஏழ்மை உலகத்திற்குத் தள்ளப்பட்டோம்.
இது யார் வகுத்த உலகமோ? யாமறியோம்.
நிச்சயமாய் நாம் மானிடப்பிறவிகள்.
ஏழைகள் என்றும் ஏழைகளாக இருக்கவே–நம்
சமுதாயத்தில் இறுகிய கட்டுகள்.
இக்கட்டுகளை மீறமுடியாதா?
மீறிக் கரை சேர்க்க
கைகொடுப்பார் எவருமிலர்.
ஏழைகள் நாங்கள் –ஆனால்
நாம் மனிதநேய நோட்டுக்கு,
அன்புத்தாள்களுக்கு...
விசுவாசக் காசிற்கு....
என்றுமே ஏழைகளல்ல.
வாழையடி வாழையாக வந்த
எம் தோழமை அது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலம்

காலம் அன்று
எம் வாழ்க்கை முற்றத்தில்
அழகுறப் போட்டது ஒரு வறுமைக்கோலம்.
இதனால், . . . .
நாம் என்றும் கறுமப்பிறவிகள்.
காலம் வரைந்த கோலத்தை
எந்தத் தூரிகை கொண்டும்
எம்மால் மாற்றமுடியவில்லை.
அல்லும் பகலும் அலைந்து திரியும் வாழ்வு.
எம் வறுமைக்கோலத்தை
மாற்றி வரைய முனைகின்றோம்.
முடியவில்லை. . . .
வீட்டு முற்றத்தில் இட்ட கோலத்தை
வான் மழை அழித்துச் செல்ல
வண்ண மழைப்பூச்சிகள்
புதுக்கோலம் போடும் –ஆனால்
நம் வறுமைக்கோலத்தை
அழித்திட முடியவில்லையே.
எம் இதயம் ஊற்றும் செந்நீரால்
இன்னும் வறுமைக்கோலம்
மெருகு பெறுகிறது.
அதற்கு அழிவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரபட்சம்

வெயிற் கொடுமையால்
வேதனையுடன் களைப்பு.
வேகமாகத் தொழிலாளி ஒருவன்
வீட்டை அண்மித்தான்.
வெயிலோ வெயில்.
சுடுமணல் பாதங்களைச் சுட்டுவிட.....
ஓட்டமும் நடையுமாய்
வந்தடைந்தான் வீட்டுக்கு.
அப்பப்பா!
நெருப்பு வெயில்.
பசியும் தாகமும் அவனை வாட்ட...
களைப்புடனே,
தண்ணீர்க் குடத்தைப் பார்த்தான்.
மனம் எரிந்தது.
குடிநீருக்குப் பஞ்சம்.
காசுக்கு வாங்காத
நீருக்குப் பஞ்சம்!
ஐயோ கடவுளே! என
எதிர்ப் பக்கம் பார்க்கையிலே
இடுப்பிலும் தலையிலும்
பானை சுமந்து மனைவி வருகிறாள்.
மனத்தில் ஒரு குளிர்மை.
அதனுற் சில சந்தேகங்கள்.
உடைக்கு...உணவுக்குத் தான்
காசில்லை வெறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையற்ற நீருக்கும்
எமக்குப் பஞ்சமெனில்
இறைவா! என்ன சோதனை?
சுவாசிக்கும் காற்றுக்கும்
பஞ்சம் வருமோ?
இயற்கை அன்னையே!
ஏழைகளாகப் படைத்துவிட்டு,
பாரபட்சம் காட்டுகிறாயே.
ஏன் தான் உனக்கும்
கருணை வராதோ?
ஏழைகளே! என்றும் ஏழைகளாகவே
இருக்கக் கடவீர்! என்று
பணக்காரன் இடுகின்ற
சாபத்திற்கு,
நீயும்.....?
ஒத்துப் போகின்றாயோ?

தென்றல்
1990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள்

ஊறல் மண் குடிசையினுள்ளே
உயிர் வாழும் ஜீவன்கள்,
மழை அட்டை ஊர்ந்து செல்ல
மயிர்கொட்டி கூரையிலே
உரிமை கொண்டாடிவிடும்.
இத்தனைக்கும் அவதானமாய்
கண்ணுறங்கி விழிக்கும் மானிடங்கள்.
மழைநீர்க் கசிவாலே...
படுக்கைகளும் குளிராகும்.
கால்வயிற்று உணவுடனே
வயிற்றில் இசைக்கச்சேரி நடக்கும்.
இயற்கை வேதனைகளை
இயன்றவரை தாங்கிவிட்டாலும்
நித்திரையும் வர யோசிக்கும்.
இத்தருணமதில் ஒரு கலக்கம்,
வானத்திற் பறக்கின்ற
இராணுவங்களின் இரைச்சல்...
இராணுவத்தின் சத்தத்தால்
கூரைமுகடு சலசலக்கும்.
இந்நிலையிலே
ஊசலாடும் தமிழினங்கள்.
கொடுமையிலும் கொடுமை இது,
உலகிற் துன்பம் என்று
சொல்லுகின்ற எல்லாவற்றையும்
சந்தித்தவர்கள் இவர்கள்.

தளிர்
பங்குனி -1990


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப்பெருக்கு

மேகம் இருள,
காற்று வீசிட,
பூமியை நனைத்திடவே
மழையெனும் மாது குணங்குறிகளுடனே
நீரினைச் சொரிகின்றாள்.
அந்த நீரிலே,
உயிரினம், தாவரம்
தாகந் தீர்த்து,
வாழ முனைகின்றன.
இங்கே....
ஏழைத் தொழிலாளியின்
மனம் இருள
சோக மூச்சு காற்றென வீசிட
கண்ணீரெனும் தண்ணீரால்
கண்கள் எனும் இருகுளம் நிரம்பி
நீண்ட நதியாய் ஓடிட
அந்த நீரிலே தான்
ஆட்டிப் படைக்கும் ஆசாட பூபதிகள்
மனித சக்தியை விழுங்கும் மாண்டங்கள்
சுகபோகித்து, குளித்துத்
திளைத்து வாழ்கின்றனரோ?
மழை நீருக்குப் பருவகாலங்கள் உண்டு. ஆனல்
ஏழையின் கண்ணீருக்கு
எப்போதுமே வெள்ளப் பெருக்கு.

சிந்தனை
தை-மாசி 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி

இல்லம் இருட்டு
ஒளிவிளக்கு இல்லை.
மனமும் இருள் வாழ்க்கையில் வறுமை.
இதனால் எமக்கு
உலகமே இருள்தான்.
சூரிய சந்திரர்களால்..
நட்சத்திரங்களால் உலகில் வெளிச்சம்.
ஆனால்
எம் மனமெனும் உலகில்
எதுவித ஒளியும் இல்லை.
மின்மினிப் பூச்சிகளுக்கும்
சிறிய வெளிச்சம் உண்டு.
முத்துச் சிப்பிக்கும்
முழுதான சுயவொளி இருக்கும்போதில்
செத்த பிணமென நாமிருப்பதேனோ?
பணமுடை என்பது தான்
எம்மிடத்தில் மூட்டைகளாய்
இடம் பிடித்துவிட
எம் வாழ்க்கையிலே
எங்கே ஒளி?
உலகின் இருளகற்ற உதயசூரியன்...
எம் இதயவிருள் அகற்றுவது
எச் சூரியன்?

மண்
வைகாசி -1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமை

பனங்கூடலின் மத்தியிலே
வறுமையின்
இனங் காண்பிக்கும் குடிசையிலே,
ஏழைமகள் ஒருத்தி
குழந்தை தனை
ஏந்திய கையினளாய்
துணைவன் வரவை எதிர்நோக்கிட
கண்கள் பூஞ்சனம் அடைந்தன...
வருவேன் என்று கணவன் செப்பிய
காலந் தவறவே...
ஏழை மனைவி ஏங்குகிறாள்,
நாயகன் வரவை எண்ணி.
குழந்தை மா வாங்கவென
அவன் கொண்டுவரும் ஊதியத்தையும்
கூடவே எதிர்பார்த்திருக்கின்றுள்.
அங்கே , அவள் கணவனுக்கு
உரிய கூலியைக் கொடுத்திட.... .
முதலாளிச் சீமானுக்குச் சில்லறையில்லையாம்.
நாளை வா!
இன்று மாற்றிய காசில்லை...
என்று கூறிய வார்த்தை
அவன் காதுகளில் நெருப்பை மூட்டியது.
தவிக்கும் தன்னிலைமை புரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கெடு போடும்
கைகார முதலாளிக்கு....
காசு மட்டும் தான் தெரியும்.
கருமித்தனம் கூடப்புரியும்.
குடிசையில் வாழும்
ஜீவன்களின்
ஒருபிடிச் சோற்றுப் போராட்டம்
எங்கே தெரியும்?
ஏழைப்பெண் காத்திருந்தே
கணவனைக் காணாது
குழந்தை முகம் பார்த்து....
குமுறுகிறாள் மனத்திலே,
நாலுபேர் தூற்றாது
நாணாக வளைந்து
உழைத்துண்ண நினைத்திடும்
உத்தமர்களுக்கு....
ஏழைகளுக்கு....
இப்படியும் சோதனை என்றால்
அவர்கள் இவ்வுலகில்
வாழவே முடியாதா?
வாழ வைக்க முடியாதா?
ஏனிந்தக் கொடுமை?

சிந்தனை
கார்த்திகை 1989.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரப் புதுமை

அவசரக்காரனே!
அவதிப்படாதே!
உன் புத்தி மத்திமம் தான்.
அவசரத்தால் ஆகுவது
பதறிடும் காரியம்.
மணிக்கூட்டுக் கம்பியைப் பார்..
பன்னிரண்டில் இருந்து
ஒன்பதுக்கு வரவேண்டுமெனில்
பாய்ந்து வந்து
ஒன்பதாவது இலக்கத்தில் நிற்பதில்லை.
ஒன்று ..இரண்டு...மூன்று ...என
ஒழுங்காக எண்ணைக் கடந்தே
ஒன்பதை வந்து சேர்கின்றது.
அவ்வாறன்றி......?
கால நேரத்துக்கு மாறாக
உன் அவசரத்தால்
நேரக் கம்பியைத் திருகி...
ஒன்பதாம் புள்ளியில் நீ வைக்கலாம்.
நேரமும் ஓடும்.
ஆனால்....
உனது புதுமையான இச்செய்கையால்
உனக்கு மட்டுந்தான் திருப்தி.
சமுதாயத்துக்கு உன் செய்கை
வடிகட்டிய தட்டு.
முட்டாட்டனத்தின் மணிமுடி நீ!
புதுமை, புரட்சிகரம் என்றால்
படிப்படியாய் வருவதன்றி
பாய்ந்து குதிப்பதில்லை.
மாறாகப்
பாய்ந்து குதித்தவை
பாதியிலே திரும்பி, தோற்றுப்போய்
பிரசவித்த இடத்திற்குச் சென்றடைவதும்
நிரூபணமான உண்மை. —பின்
படிப்படியான பாதையை
நாடுவதும் சகஜம்.

அ லைகள்
ஆடி – 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே!

நவீன கிரகந்தக் கர்த்தாக்கள்
நாளுக்கு நாள் அரும்பி...
உனக்கு விடுதலை தேடுகிறார்களாம்.
பெண்நிலைவாதம் எனப் பல பேசி
பொருத்தமற்ற வாதங்கள் புரிந்து
பெண்ணுக்கு இன்னும் விடிவில்லை என்பதையா?
வெட்டவெளிச்சம் ஆக்குகிறார்கள்?
ஒன்றையே திரும்பத் திரும்பப் பேசிவிட்டால்
பேசியது கைகூடி விடுமோ?
பேச்சுக்களாற் கிடைத்திடாது பயன்-நெடு
மூச்சுக்களாலும் இல்லைப்பயன்.

மாதே!
உன்னை நீ உணர்ந்து,
உன் பூட்டு அகற்றி
உன் வீட்டிலிருந்து சுதந்திரமாய்,
புறப்படு!
உனக்கு மற்றவர் வாதங்களை விட...
நினது ஆதங்கங்கள் ஆணிவேர்.

தையலே!
பையப்பைய..அடிமை மயக்கத்தில்,
உறக்கத்திலிருந்து விழித்தெழு!
வைகறைக்குள் உனக்கு
விடிவெள்ளி முளைக்காது. —ஆறுல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறைகள் சில . . .
வந்துபோகும் வரைக்கும்,
பொய்க்கறைகள் வராமல்
அக்கறையுடன் உன்குடும்பச்
சுற்றைக் கவனி!
உனக்காக வெளியிற் பேசும்
அதிமேதாவிப் பேச்சினைக் கவனி!
யார் யாருக்காக. . . . ?
எப்படி? ஏன் ?பேசுகிறார்கள்,
என்பதை நோக்கிடு!
அதன் பின் உன்னைத் தயார்படுத்து!

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் வருந்து

பெண்ணே! வேஷக்காரரை நம்பாதே!
பெண்விடுதலை கோருவோர்போல் நடிப்பர்—பின்
பெண் எனக்கடிமை என்பார் வீட்டில்.
பெண்நிலை வாதத்தை மதிப்பதுபோல் பேசிடும்
பெண்ணடக்குமுறைக் கும்பல் ஆரோக்கியமாய் வளர்கிறது.
பெண்களுக்குத் தன்வாழ்வில் இடங்கொடார். —பின்
பெண்ணுரிமை கோரிடுவர் வெளிவாழ்வில்.

பற்பல பேசிடுவர் பெண்ணுரிமை கோரி—ஆனால்
பதுக்கி அமுக்கிடுவர் தன்வீட்டினிலே.
விற்பன்னராம் சிலர் வாதக்கருத்துக்களிலே—ஆங்கவர்
அற்பவறிவினைக் கண்டே நீ மனம் வருந்து!
தற்புலமைதனைக் காட்டிட எண்ணியவராய்— பலர்
தம் கருத்துக்ளைப் போல் போலிகளை முன்வைப்பர்.
சொற்புலமையை முன்வைக்க முனைவோர் —இன்று
சாற்றும் பசப்பு மொழிதனையே இனங்காண்பாய்.

சுதந்திரம் பெண்ணுக்கு வேண்டுமென்று நடித்து
நிதம் பேசியும் எழுதியும் வருவோர் தம்
விதண்டா வாதத்தின் உட்பொருள் உணர்வாய்!
பதம் ஒன்றின் அர்த்தம் புரியாராய்ச் சிலர்
விதம் விதமாக எழுதிவிட்டால் கிடைத்துவிட்டதே
சுதந்திரம் என்றெண்ணுவோரும் உளரே. —பெண்ணே!
அதம்தான் அவையன்றி அரிவையர்க்கிதம் தராதே.

நமதுகுரல்
ஆவணி —1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதிச் சரக்கு

பெண், இன்று
ஓர் வியாபாரப் பண்டமாம்.
இலங்கையிலிருந்து ஜப்பானியருக்கு
மணப் பெண்ணாக ஏற்றுமதி.
மாறுபட்ட கலாச்சாரத்துக்கு
இலங்கை மங்கையர் அறிமுகம்.
இதைவிடக் கொடுமை எது?
மத்திய கிழக்கு ஆசியாவிற்கும்
இந்திய-இலங்கைப் பெண்கள் ஏற்றுமதி.
உழைப்பைக் காரணங்காட்டி
உடலைக் கொத்துவதற்கு
மத்திய கிழக்கு ஹோட்டல்களில்,
பிரமுகர்களின் கண்களுக்கு,....
கன்னி விருந்து.
திறந்த பொருளாதாரச் சந்தையிலே,
தின்பண்டமென ஏற்றுமதியாகிவிடும்
ஆசியாப் பெண்களுக்கு
வேலைப்பாதுகாப்பு உண்டா?
சுதந்திர வர்த்தகவலயம் காட்டிவிட்ட
சுதந்திர உழைப்பாளிகளா?
உலகச் சந்தையிலே பெண்கள்
மலிவான உழைப்புச்சக்தியாம்.
இதென்ன கொடுமை?
வேலைச் சுரண்டல்களுக்கும்
இவர்கள் தான் தேவையோ?

வண்ணத்துப்பூச்சி
கார்-மார்கழி 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமை

கற்பு அது வெற்பு
கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.
தன்னிலைமை தன்னிற் பிறழாமை.
விதித்த நெறிமுறையினின்றும் தவறாமை,
என்று பற்பல விதத்தில் அர்த்தங்கள்.
இந்த விதிமுறையை மீறியவன் சொற்றிறம்பியவனே.
சொற்றிறம்பியவர் எவராயினும் கற்பிழந்தவரே.
தன்னிலையிற் பிறந்தவளாயினும் கற்பிழந்தவளே,

ஆணுக்கும் பெண்ணுக்கும் இது பொது
அதை விட்டு......
கற்பெனப்படுவது பெண்ணுக்கு மட்டுமே
என்று கூறுவது எதனாலே?
பெண்பக்கம் திருப்பிவிட்ட காரணி எது?
கர்ப்பப்பை எங்குண்டோ அங்குதான் கற்புண்டோ?
கற்பின் உருவம் கர்ப்பப்பையா?
கர்ப்பப்பை கறைபட்டால் கற்பிழப்பு.
இதுதான் சமுதாயம் விதித்த கற்பிலக்கணம்.
ஆண் கற்பிழக்கமாட்டான் —கருப்பையில்லை.
இன்று நிலவிடும் விதிகள், சமுதாய எடுகோள்கள்.

கற்பெனப்படுவது பொதுமை என்று
பாரதி சொன்ன வார்த்தை எல்லாம்
இன்றும் காற்றிலே தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பு ஒரு கண்ணாடி
தாங்கியிருக்கும் பெண்ணோ மட்பாண்டம்.
உடைந்துவிட்டால் பழைய உரு உருவாகா.
ஆண்களுக்கு கற்பு இல்லையாம்,
உண்டு என யாரும் சொன்னால் .÷அது
பொற்பாத்திரம்.
உடைந்தாலும் பழைய உருப்பெறுமாம்.
சமுதாயச் சட்டப் புத்தகத்தில்
எழுதப்பட்டுள்ள சரத்துக்கள் இவை.
பொய்மை பொதிந்த வாய்மைகள்.
பெண்ணொடுக்குமுறையின் பக்கத் துணைகள்.

***********


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுநோயா?

வெண்ணிலவே!
உன் தூயவதனத்தில் ஏன் கறை?
அது உனது தொழு நோயா?
பரம்பரை வியாதியா?
பெண்ணின் முகத்திற்கு
வெண்ணிலவே! உன்னை ஏன் கவிஞர் உவமிப்பர்?
உன்னைப்போல் பெண்முகத்தில் ஏது கறை கூறிவிடு!

பெண்ணே!
உன் சிந்தனை ஐதார்த்தமானது,
உன் வதனத்தில் கறையற்ற நீ
எப்படி எனக்கு ஒப்புவமை ஆவாய்?
ஆனால், . . . கேளும்!
உன் குலத்துள்ளே கறையுள்ளது போல்
நீ இரண்டாந்தரப் பிரஜையாம். . . .
நான் கூறவில்லை.
உன்னினத்துச் சமூகம் கூறுகின்றது.

ஆதலால். . நீ
அங்கம் முழுவதுமே கறைப்பட்டவளா?
உன் பிறப்பு என்றாலே ஒரு கறையாம்.
நான் வெண்ணிலவு மங்கை.
வான வீதியில் பயமின்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி வருகின்றேன்.
எனக்கு எதுவும் கறையில்லை.
குறையும் இல்லை.
அப்படி எனக்கு இருப்பதாகக் கூறுபவர்களும்
உன் இனத்து மானிடர் தாம்.
இப்படியே பெண்ணே!
உன்னைக் குறை கூறுவதும், விமர்சிப்பதும்
இழிவுபடுத்துவதும்.....
இன்றுவரையும் மாறாத தொழுநோய்
உன் இனச் சமூகத்தவருக்கே.
எனக்கல்ல மாதே!
இத் தொழுநோய்க்கு
இனியாவது மாற்றுமருந்து தேடிவிடு!
புரையோட விடாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதுருவங்கள்

மற்றவர் பார்வைக்கு
நாங்கள் குடும்பம் — அதுவும்
அளவான குடும்பமாம்.
இதமான வாழ்க்கையாம்.
என் மனப்பார்வைக்கு — அது
உள்ளம் இணையா நெருக்கம்.
உடல்கள் இணைந்தது போல் —இன்னும்
உள்ளம் இணையவே இல்லை.
இணையும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.
ஏனெனில்.....?
என்னகத்தார் உருசி வேறு.
என் உருசி வேறு.
வடதுருவம் தென்துருவம்....
ஒன்றையொன்று சங்கமிக்கமுடியுமா?
ஏழை என்ற காரணத்தால்
சீதனப்புல் என்வீட்டுக் கோடியிலும்
முளைக்கவில்லை.
ஆதலால்.....?
வயதால்..உடலால்...மனத்தால் பொருத்தமற்ற
மாப்பிள்ளைக்கு —நான் மணப்பெண்.
சீதனத்தீனி போடமுடியவில்லை என்னால்.
இதனாலோ என்னவோ?
இன்னும் பிணக்கம்.
சமுதாயச் சங்கிலி என்னைப் பிணைப்பதால்—அதைத்
தகர்க்க முயல்கிறேன்.
முயன்றுகொண்டே இருக்கிறேன்.
அதுவே என் ஆதங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனச்சீர்திருத்தம்.

கரும் பச்சைக் கம்பளமென
செழித்த புல் மேட்டினிலே
சுகம் காணத்துடிக்கின்ற
ஆன்மா ஒன்று.
காலமகள் வரைந்துவிட்ட,
இயற்கை அன்னை கோலமிட்ட
கரும்பச்சைத் தாவரங்கள், ஒற்றையடிப் பாதைகள்....
நெடித்து நிற்கும் பனைகள்.
இயற்கையின் படைப்பை
இரசித்து மனதிற் குளிர்மை பெற,
அந்த ஆன்மாவாம்
ஏழைப் பெண்ணுக்கு வகையில்லை.
சீதனத்தின் விலைவாசி ஏற்றத்தாலே
வயது ஏற்றம் பெற்ற மங்கையவள்.
ஆதனம், பாதனம், மாதனம் கேட்டு
வேதனையொடு வயதையும் வளர்த்துவிட்டனர்,
மானிடத்தில் மாப்பிள்ளை என்ற
மறுபக்கத்தினர்.
சீதனக் கொடுமையாலே
மங்கை காத்திருக்க,.....
பணம் சேர்க்கமுடியவில்லை.
மாறாக வயதைச் சேர்த்து
அதிகரிக்கச் செய்தது தான்,
அவள் வாழ்விற் கண்ட மிச்சம்.
கனவுகள்... கற்பனைகள்....
கற்பனையில் திருமணவாழ்க்கை.
கனவினிலே இல்லத்தரசி.
விடிவெள்ளிப் பொழுதினிலே,
தன்னைத் தான் உணர்கையிலே
தரைமீது புற்பாயிலே துயின்று,
தன் கனவில் நாளுங் கண்டவற்றை
அகல விழிகள் கொண்டு தேடுவாள்.
எல்லாவற்றுக்கும் திருப்பம், சீர்திருத்தம் உண்டு.
இதற்கு மட்டும் இல்லாதிருப்பதேன்?
சீர்திருத்தம் நாடாத ஒன்றா? வேண்டாத ஒன்றா?
நாளுக்கு நாள் காலத்துக்குக் காலம்
நூறு.. ஆயிரம்... இலட்சமாகி...?
விலைப்பேரம் வளர்ந்தது தான்
சீர்திருத்தமோ? சீதனத்தில்?

க. ஊலவிளக்கு
தை - மாசி 90.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு

பெண்ணொருத்தி.
உடலிலே இளமை பொங்க
இருகரங்களிலே தன் குழந்தைகள்ள
ஏக்கமுடன் அணைத்தவண்ணம் வீதியிலே,
போவோர் வருவோர் முகம் பார்த்து—மனதில்
கதறிக் குமுறுகிறாள்....
பச்சிலைகளை வாழவைக்க
பாவையவள் பாதையோரம் குடியிருப்பு.
விபத்து ஒன்றிலே,
அகால மரணத்தினால்
கொழுநனை மேலனுப்பிவிட்டு
கலங்குகிறாள் நாதியற்று.
கைம்பெண்' என்ற புதுநாமத்தையும் பெற்று.
அந்தோ! ஒருபெண் – கர
அணைப்பிலே இரு குழந்தைகள்.
கண்ணீரும் கம்பலையுமாய்
வாடிய வதனத்துடன்
வாழ வகை தெரியாது
வீதியிலே வாழ வந்துவிட்டாலும்
விதியின் வசத்தாலே....?
தனிமைப் பாதையை நாடும்
தனித்த வாழ்க்கையைத் தேடும்
ஒரு மனத்தவிப்பு.
நிமிடமெல்லாம் குடியுடனே
குடும்பம் நடத்தும் கணவனுக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாவிடை கூறிவிட்டு,
தன்பலத்தில் நம்பிக்கையுடனே
தாவியடி வைக்கின்றாள்.
தன் மக்களுடன் நிம்மதியாக...
சிறப்புற வாழலாம் என்ற துணிவுடன்.
குடிகாரக் கணவனுக்கு
குடித்தனம் என்றால் என்னவென்று
காண்பிக்கும் ஒரு உத்வேகம்.
அவள் மனதிலே உதயம்,
"ஆம்பிளை மாதிரி" என்ற பெயர் பெற்று.

மறுபுறத்தில் ஒரு மாது.
மாறிவிட்டான் காதலன்
மகவைக் கருவில் உருவாக்கிவிட்டு.
சகம் கூறும் பழிமொழிக்காளாகி
மங்கையவள் வீதியிலே வந்துவிட்டாள்.
பார்ப்போர் கண்ணுக்கு அற்பமாகி
பாவியவள் மனம் தவிப்பு.
எல்லோருக்கும் ஏளனமாய்
சட்டநூல்கள் கூறும் அனைத்துக்
குற்றங்களுக்கும்......
மேலான குற்றம் ஒன்று செய்துவிட்ட
குற்றவாளி போல்.....?
அவளின் கதை ஊர்வாயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிழந்தவள் , என்ற நாமம் பெற்று.
'அது' ஒரு மாதிரி எனவும் பெயர் பெற்று.
தேடுவாரற்று வீதியிலே வேரிற் பழுத்த பலா.
ஆனால் சிலர் . . . . . ?
அன்றாட நுகர்வுக்காக
அவள் மேல் வலை விரிப்பு.
இளமையின் இரகசியம்
அவளுடலில் குடியிருப்பதால் நுகர்வோர்களின் அதிகரிப்பு.
ஆனால் . . .
மங்கையவள் மனதில் யாவும்
முற்றுத்தரிப்பு.
சமுதாயத் தீர்ப்பினாலே – எம் பெண்களுக்கு
இப்படிப் பல பிரிப்புகள்.
அதனால் அவள் மனதிலே
என்றும் நெருப்புகள்.
பெண்ணொடுக்கு குப்பைகளை – ஒருநாள்
பொசுக்கியே தீருமந்த நெருப்பு.

********


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசமலர்கள்

வனத்திலே வாசமுள்ள மலர்கள் – சில
விரிந்து மலர்ந்து அழகு பெருக்கும்.
வண்டுகள் இஷ்டப்படி தாவித்தாவி
தேன் குடித்து மயங்கும்.
சுதந்திரமாகப் பூக்கள் மலர்ந்து
சுதந்திரமாகவே அவை வாழ்வை முடிக்கும்.
ஆனால்....?
மனைதனிலே...ஏழ்மைப் பரம்பரையிலே,
(உதித்த) அரும்பிய கன்னி மலர்கள்
தேடுவாரற்று
தினம் தினம் வாடி வாழும்.
தேன் குடித்திட வரும்
வண்டினங்களுக்கு ஊதியம் செலுத்திடவேண்டுமாம்.
ஏழைக் கன்னிகளுக்கு ஏற்றவரன் தேடி
கிடையாது மனவாட்டம்.
இல்லத்து மலர்களைப் பறித்து –அதன்
இஷ்டமின்றிச் சூடிவிட (இணைந்துவிட)
துடிக்கும் சில வண்டினங்கள்,
தம் ஆயுள்வரையும் கூடி
இல்லறமாக இணைந்து வாழும் வாழ்வை
இழிவு என ஒதுக்குமாம்– அப்போ
தேன் வேப்பெண்ணெயாய் மாறுமோ?
காரணம் இதுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகளை....

சங்ககாலத்திலே மக்கள் வாழ்க்கையில்
போருங் காதலும் இலக்கியப் பொருள்.
கைக்கிளை பெருந்திணை எனப்பட்ட
அகத்திணைகள்.
உரிப்பொருள்கள்.
காதலும் போரும் ஒன்றிணைந்திருந்தது....
அன்றைய விடுதலைப்போர்களில்.
இன்றைய நம் தாயகத்து,
விடுதலைப் போரினிலே....
காதலையும் காணார்,
காலை உணவையும் காணார் – சில
காதலும் அங்கே இருந்திட்டால் – அது
உரிமைகோரி நிற்கும் வரை
உயிர் வாழ்கின்ற கால இடைவெளியிற்றான்,
கிட்டும்........
வாழத்துளிர்க்கும் உயிர்கள்
விடுதலையில் வைத்துள்ள
வைராக்கியத்தாலே.....
தன்னையே மறந்து மண்ணையும் மறந்து
விண்ணை நாடுகின்றன.
சிலவேளை அவை
அங்கே கூடிக்களித்திருந்து
சுதந்திரத்தின் சுவடுகளை
ஈழத்திலே கண்டு
பூமாரி பொழியும்.

ஏலையா ஆடி. 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தவை

மல்லிகை மணக்கும் பந்தரின் கீழ்
மகிழ்வாய் அமர்ந்திருந்து
நாலூருக் கதைகளும் நயமாகக் கேட்டு நாம்
கும்மாளமிடும் காலம் வாராதோ.
தாத்தா கதைகள் சொல்ல,
பாட்டியிடம் உறவுமுறை கேட்க,
அம்மா வயிறார உணவு தந்து
அன்பால் அரவணைக்கும் அமுதநாள் வருமோ?
கூடிச் சிரித்து விளையாடிய
உடன்பிறப்புக்கள் யாவரும்
நாடு, பலதேசம் சென்றுவிட்டனரே.
நானோ இங்கு.....?
சிதறி வாழும் சகோதரர்களும்
அம்மா அப்பா, தாத்தா பாட்டி எல்லோரும்
இணைய முடியாதா?
சகோதரர்கள் கிளைவிட்டுப் பரந்துவிட்டனர்.
மீண்டும் ஒரு மரத்தின் கிளைகளாக முடியுமா?
முடியாது.
முடிந்தால் வாழ்வே மாயம் பொய்.
உலகமோ நாடகமேடை
நடிக்கும் பாத்திரங்களோ
நாளுக்கு நாள்—காலத்துக்குக் காலம் வேறு.
மானிடங்களின் நடிப்புகள் வாழ்க்கை அரங்கிலே
நடிகர்களின் மறைவு, மாற்றத்தின் பின்னே
புதிய நடிகர்கள் வாழ்வரங்கிலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்காடு

அடக்கம் என்ற முக்காடு
அழகாகப் பெண் சிரசினிலே
சரி செய்யப்படுகின்றது.
முக்காட்டின் விளிம்புகளில்
சரிகை வேலைப்பாடுகள் போல்
பெண்ணுக்கு மேலும் திணிக்கப்படும்
அடக்கத்தின் இலக்கணங்கள்.
அடக்கம் என்ற திரையைப் போட்டு
ஆமையைப் போன்றே
தலையையும் முகத்தையும்
உள்ளே இழுத்துவிட வேண்டுமாம்.
ஆமையின் தன்மையினைப் போல்
இன்னும் பெண் வெளியிற் தலைநீட்டாது
வீட்டுக்குள்...ஆமை ஓட்டுக்குள்
அடங்கிட நியதியோ?
முக்காட்டின் சரிகை வேலைப்பாடு
பெண் சுதந்திரத்தை
முடக்கிவிடும் அலங்காரமா?
முகமலர் மறைத்திடும் – வெளி
முக்காடு எதற்கு?
உள்ளிதய மலருக்கு....
உணர்வுக் கொந்தளிப்புகளுக்கு.....
போட முடியுமோ முக்காடு?

சிந்தனை
பங்–வைகாசி. 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் எத்தனை நாளைக்கு?

அமிழ்தினுக்கே ஒப்புக்கூறிடும் – நம்
பேச்சிரைச்சல் ஒலியாம் அன்னைமொழியை,
முக்கனிச் சுவை சுரக்கும் முத்தமிழை,
திக்கெட்டிலும் பரவச் செய்திடவே – இங்கு
பக்குவமாய் உதயமாகியது தமிழ்மன்றம்.
ஓராண்டு விழாக்கோலம் எடுத்து – இன்று
அணிதிரண்டு வரும்படி அனைவரையும் அழைக்க
நாமின்று ஒன்று சேர்ந்துள்ளோமிங்கே.

மனமினிக்கும் நாமமுடைத் தமிழ்மன்றம் – இன்று
மகிழ்வுடனே விழாவெடுக்கும் இவ்வேளையில்
முதற்கண் எம் கடமையென,
வந்தோருக்கு வந்தனங்கள் செப்புகின்றோம்.
விழா அமைப்பாளருக்கும், விழாத்தலைவருக்கும்
அறிவுடைப் பெரியோருக்கும், கவியரங்கத்தலைவருக்கும்,
கவி பொழிய வந்திருக்கும் கவிஞருக்கும்,
விழாக்காண வந்துள்ள சபையோருக்கும்
என்னினிய வந்தனங்கள்! ஏற்றிடுக இக்கணத்தே!

நாடுவிட்டு நாடுகடந்து நாம்
தேடித் தஞ்சம் பெற்றோம் அனாதைகளாக,
நாச்சுவைக்க, காதினிக்க, மனங்களிக்க
நற்றமிழ் அமிழ்தினை நயந்துண்ண நாதியற்று
சுற்றம், பக்கம்தனை மறந்து சிதறிவந்து
நிற்கிறோம் இங்கே, அந்நிய மண்ணிலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கவில்லை நம் தாயகத்தை,
கூற்றுவனும் கொல்லவில்லை - ஆனால்
பெற்ற மண்ணில் நாம் நிற்க -பொழுது
இன்னும் புலரவில்லை... பொறுத்திருப்போம்.

சொந்த மண்ணில் காலையூன்றிப் பதிக்கும்
சிந்தனையைத் தூண்டிவிட, போராட்டம் உதயமாகிட...
நிந்தனைகள் உருவாக, நித்தம் மண் பதற்றமுற...
வந்தனங்கள் தாயகத்துக்கு கூறி நாம்-அடுத்த நாடு
வந்துவிட்டோம் தன்னலநோக்குடனே.
வந்தவரிற் சிலரிங்கு தம்நிலை மறந்து
சுந்தரத் தமிழ்க்கலாச்சாரம் பிறழ சுகஜீவிகளாக
பந்தம் பாசம்தனை ஒருபுறம் ஒதுக்கி வைத்து
சிந்தை மகிழச் சுகவாழ்வு வாழ்வது எத்தனை நாளைக்கு?
இந்த வாழ்க்கைதான் எத்தனை நாளைக்கு?

விடுதலைப் போராட்ட வெடிப்பாலே- இன்று
புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் பலதேசத்தில்.
பல நாட்டுக் கலாச்சாரம் ஒன்றாய்க் கலந்து,
பெற்ற பூமியில் ஒன்றாய் சங்கமித்திடுமோ?
மேலைக்கலாச்சாரம் நம்மதாச்சாரத்தை மறைத்து
நிலைகுலைய வைப்பதெல்லாம் எத்தனை நாளைக்கு?
அலையும் இனமாக, நாடற்றவர்களாக -இன்னும்
போலிவாழ்வு வாழ்வதெல்லாம் எத்தனை நாளைக்கு?

வேற்றுநாட்டில் நாம் வாழ்ந்துவிட்டால்
பெற்றநாட்டுக்கு நாம் வேற்றினத்தவரில்லையே.
ஏற்றம் பலவுண்டு மேலைக் கலாச்சாரத்திலென-அதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுவிடத் துடித்து . . தம்மை மறந்து .
நடையுடை தன்னில் சடை தன்னில்
தடல் புடல் மாற்றங்கள் பற்பல
தேநீர் தண்ணீர் பானங்களுடனே
பெருங்குடி வகைச் சேர்க்கைகள் எல்லாம்
பருகுகின்ற சாதாரண குடிநீராகி
விடியல் கருக்கல் பேதமின்றியே
பிடித்தமான ஆகாரமாயிருப்பதுவும் எத்தனை நாளைக்கு?

கூண்டினில் கிளியினைப்போல் - நாமிங்கு
முடங்கி ஒடுங்கிச் சிறைப்பட்டுப் போய்
நிரந்தரமற்ற நிலையினில் வாழ்வது கண்டீர்!
அந்தரமாய் நாமும் யந்திரமாய் மாறி
எந்நேரமும் ஓட்டமும் பதற்றமுமாக வாழும் போதில்
பச்சைநிற நீலநிறக் கடிதங்கள் வந்திடும் போது,
மிச்சமுள்ள நிம்மதியும் மூழ்கிவிடும்.
துச்சமென இவற்றையெல்லாம் உதறிவிட்டு
இச்சையுடன் சொந்த மண்ணில் நடந்தே
அச்சமின்றி இரவுபகல் உலவி வாழும்
அச்சமயத்தை நோக்கி ஏங்குவதும் எத்தனை நாளைக்கு?

தாய்நாட்டில் நம்மினத்தோர்-ஒட்டிப்போன
காய்ந்த தோற்பையென வயிறு ஒட்ட
அன்றாட உணவுக்கு அலையும் போதினிலே
இன்றிங்கு அவித்துக்கொட்டுதல், ஆடம்பரங்கள்
தேவைக்கு மீறிய வீண்செலவுகள் - என
அந்தஸ்தைக் கடந்த கற்பனைகளால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பல வீண்கொண்டாட்டங்கள் நடக்க,
திண்டாட்டங்கள் பல தாயகத்திலே.
தத்தம் குடும்பமே அங்கே திண்டாடுவது புரியாது
கண்கெட்ட பிறகு சூரியவணக்கம் செய்வதும்
இன்னும் எத்தனை நாளைக்கோ?

தாயகத்தில் வீட்டுக்கு வீடு மரணஓலம்
நாளுக்கு நாள் விலைவாசி உயர்வினால்–நேரக்
கூழுக்கு கூட வழிவகையில்லை.
பாலுக்கு அழும்பிள்ளை அங்கே – இங்கு
தோலுக்கு மெருகூட்டல், மேனிமினுக்கல்
நாலுக்கும் இரண்டுக்கும் பேதம் புரியாது
வேலியே பயிரை மேய்வது போல்– சிலரிங்கு
வாழ நினைப்பதும் எத்தனை நாளைக்கு?

சீதனம் பாதனம் என்று ஆணுக்கு விலைபேசி
பெண்வீட்டார் ஆணைக் கொள்முதல் செய்யும்
வேண்டாத செயலெல்லாம் மாறாதோ?
பெண்ணை அடிமையாக்கி ஆக்கிரமித்து
வீட்டிலே விலங்கு பூட்டிய விலங்குகளாக
அடக்கி ஒடுக்கி முடக்கி வைப்பதெல்லாம்
அட..., இன்னும் எத்தனை நாளைக்கு?
அகதி என்று இங்கு பதிந்து பணமெடுத்தும்–தான்
ஆண்பிள்ளை என்ற காரணத்தை வைத்து
ஆயிரக்கணக்காக சீதனம் வாங்குவோரின்
ஆகாயக்கோட்டை எல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம்
ஆராய்ந்துணர்ந்த வார்த்தையிது.
வீணுக்குப் பலர் பெண்ணை ஒடுக்கி
வீம்பு காட்டி அவள் உரிமை பொசுக்கி
தம்பலத்தை முன்வைப்பர். – பெண்
அம்பலத்துக்கு உரியவளல்ல,
அரங்கத்துப் பொருளென – இன்னும்
தரமற்ற எண்ணங்களைச் சுமந்து
வீரம் பேசிவரும் வீரர்கள் இங்குமுளரே. – அறிவு
உரம் பெற்ற மாதரென உலகில்
வலம் வருவது, அரசியலில் அங்கம் வகிப்பது
அத்தனையும் அறிந்தபின் அவளுக்கு
உண்டோ ஆணுக்குள்ள உரிமை? என
கேள்விகள் ஆயிரம் கேட்டு,
மூடச்சமுதாயத்தின் நிழலிலே இளைப்பாறும் – பல
மைந்தர்குழாம் பெண்ணுரிமையை நிந்தித்து
சிந்தனையின்றி வாழ்வதும் ஏன்?
மூடச்சமுதாயம் விதித்த இத்தடைகளும்
இன்னும் எத்தனை நாளைக்கு?

என் பிள்ளைக்குத் தமிழ் தெரியாது.
அன்னைமொழி அவனுக்கு அந்நியம்,
டொச் தான் அவன் வாயில் வரும்,
தமிழ் என்றால் தடக்கி வீழ்வான், – என்று
என்னென்னவோ பல சொல்லி
தாய்மொழியைக் கீழ்மைப்படுத்தியே
தமிழ்க்கல்வி நமக்கு வேண்டாம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கதைத்தால் இழிவு..வாய் கூசும்,
தமிழ் அது..அமிழ்தென்பது பொய்யே என்பதுபோல்
தமிழ்ப்பெற்றோர் சிலர்,மார்தட்டிப் பெருமைப்படுவது
ஐயகோ! இன்னும் எத்தனை நாளைக்கு?

மேனாட்டில் தமிழ்மணம் வீசிட
தமிழ்விழாக்கள்,கலாச்சார விழாக்கள் பல
இடத்துக்கு இடம் நடக்கிறதே தப்பாமல்
தமிழ்க்கல்விக் கூடங்கள்,சஞ்சிகைகள் என
தனித்துவமாய் மலர்கின்றன,தமிழினச் சுவடுகளாக
கலைகள் யாவும் கவின்பெற்று மணம் பரப்பி
கானமழை பரவலாகப் பெய்கிறதே.
தமிழ்மணம் இங்குவாழ் சிலருக்கு..துர்மணம் போல்
தாமே மேதாவிகள் எனச்சிலர் மனக்கோட்டை கட்டி
தம்மினம் புரியாது ஒற்றுமையைக் குலைப்பதுவும்
நம்மினம் இங்கு தனியினம் என்று உணராதிருப்பதுவும்
தம்மினத்தைத் தாமே விமர்சிப்பதுவும்
பொருந்துமா தமிழினத்தின் விடியலுக்கு?
இவற்றை நாம் பொறுத்துச் சகித்து நடந்து
வாளாவிருப்பதுவும் எத்தனை நாளைக்கு?

நம்மினத்து அழிவிலே தான் புதுச்சமுதாயம்
நாளைக்கு முளைவிட்டுக் கிளைவிடுமோ?
சமுதாயநாற்றங்கள்,அந்தஸ்துக் காற்றுக்கள் யாவுமே
அழிந்த ஒரு மலர்ச்சிக்காலம்
வந்துவிடும் நாள் வெகுவிரைவில் வாராதோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த துன்பம் வந்த துன்பம் எல்லாம் மாறி
புதுவகை விதியொன்று தாய்ப்பூமியிலே பிறக்கும்.
அதுவரை நாமிங்கு எம்மைத் தயார்படுத்தி
புதிய சமுதாயத்தை உருவாக்கிட முனைவோம்.

அன்று சங்கம் அமைத்து தமிழ்வளர்த்னர், —இன்று
இங்கு ஒரு தமிழ்மன்றம் வளர்ந்து
பொங்கும் இளமை தங்கிய மங்காத்தமிழை
வளர்த்து வரும் இத்தளிர்நடைப் பருவத்திலே
கோலாகல விழாக்காணும் இப்பொழுதினிலே
நாமும் கலந்து மகிழ்ந்திருக்க...
அவையோர் பாராட்டினைக் கூறிட
அனைவரும் இணைந்தே ஒருவயதுப் பூர்த்திக்கு
மன்றத்தின் ஒருவயதுப் பூர்த்திக்கு...
வாழ்த்துக்கள் கூறிடுவோம் மனம் நிறைந்து.

பிராங்போட் 'தமிழ்மன்றம்' தனது முதலாவது ஆண்டைப் பூர்த்தி செய்த நாளான 10.2.90 அன்று நடைபெற்ற கவியரங்கிலே வாசிக்கப்பட்ட கவிதைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்திரம் ஏனடி?

எம் நிலையை நாம் உணர்ந்தபோதில்– என்றும்
நம் உறவை நாம் நன்றாய்ப் புரிந்த வேளை
தம் நட்பைத் தாம் தெரிந்த காலை – இனி
உம் நிலைதனை அறிந்திடச் சாத்திரம் வேண்டுமோடி?

சாத்திரம் தோத்திரம் ஏனடி பெண்ணே! –மனப்
பாத்திரம் பளிங்குபோல் இருந்துவிட்டால்..
காத்திரமாய் எம் சிந்தனை இருக்கும் போதில்–பொய்ச்
சாத்திரங்கள் எல்லாம் ஏதுக்கடி பெண்ணே!

சரித்திரம் எல்லாம் சாத்திரம் கண்டதுண்டோ?–வாழ்வில்
தரித்திரம் பற்றியோருக்கு இது ஒரு தேறுதலோ?
புரிந்துணர் பெண்ணே! உன் வாழ்விலே –உனக்கு
வரவிருப்பதைக் கூறச் சாத்திரந்தான் தேவையோ?

"கொள்ளை லாபத்துக்கு இடமுண்டு" என்ற சாத்திரத்தை
உள்மனதிலேற்றி வைத்து வாளாவிருக்கலாமோ?
அள்ளிக் கூரையாலே கொட்டும் என–காத்து
பள்ளியறையிலும் அண்ணாந்து பார்க்கலாமோ பெண்ணே!

அவனவன் முயற்சி அவனுக்குச் செல்வம்–பொருளுக்கு
ஆவன செய்வோன் வாழ்வில் என்றும் உயர்வு.
தேவனவன் திருவுளத்தால் நேர்மைவழியில் நின்று–தம்
தேவைகளை நிறைவேற்றிவிட ஏனடி சாத்திரம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" எம் நிலையை நாம் உணர்ந்த போதில்- என்றும்
நம் உறவை நாம் நன்றாய்ப் புரிந்த வேளை
தம் நட்பைத் தாம் தெரிந்த காலை - இனி
உம் நிலைதனை அறிந்திடச் சாத்திரம் வேண்டுமோடி? "



## கலைவிளக்கின் வெளியீடுகள்

* சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம்.
* கவிதைச்சோலை (பாகம் -1 )
* பாலர் பாடல்
* மானிடத்தின் மறுபக்கம் (கட்டுரைத் தொகுப்பு )
* உறவுக்குப் போராட்டம் (சிறுகதைத் தொகுப்பு )
* அழிவின் சுவடுகள் ( புதுக்கவிதைகள் )
* சிந்தனைக்குரிய உருவகங்கள் (உருவகக் கதைகள்)
* சிறுவர் களஞ்சியம் ( சிறுவர் மலர் )
* கவிதைச்சோலை ( பாகம் -2 )
* பூகோளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org